செ.வெ.எண்: 34 நாள்: 21.09.2020

**திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வெள்ள தடுப்பு குழு அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆனந்த்.,இ.ஆ,ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வெள்ள தடுப்பு குழு அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆனந்த்.,இ.ஆ,ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆனந்த்.,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்ததாவது…

திருவாரூர் மாவட்டத்தில் வெள்ள தடுப்பு குழு உறுப்பினர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள பாதிப்படையக்கூடிய கிராமங்களின் விபரம் மற்றும் வரைபடங்களினைப் பெற்று தொடர்புடைய கிராமம் எந்த ஆறுகள் மற்றும் வாய்க்கால்கள் கரை பொழிவு / கரை உடைப்பு ஆகியவைகளினால் பாதிப்படைந்தது என்ற விபரங்களினைப் பெற்று அவ்விடத்தினை ஆய்வு செய்து தற்போதைய சூழ்நிலையில் தடுப்புப் பணிகள் ஏதும் செய்யப்பட்டுள்ளனவா? என்றும், அவ்வாறு தடுப்பு பணிகள் ஏதும் செய்யப்படவில்லையெனில் மீண்டும் அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் எடுக்கப்பட வேணடிய முன்னேற்பாடுகள் குறித்து தொடர்புடைய துறையினருடன் கூட்டம் நடத்திட வேண்டும்.

அக்கிராமத்தில் தற்போதைய நிலையில் தங்க வைக்கப்படும் மக்களின் விபரங்களினைப் பெற்று கோவிட்-19 காலத்தில் தெரிவிக்கப்பட்டவாறு சமூக இடைவெளியுடன் தங்க வைக்க ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி/கல்லூரி/திருமண மண்டபங்கள் போதுமானதா? என்பதினை ஆய்வு செய்து, அவ்வாறு போதுமானதாக இல்லாத பட்சத்தில் உடனடியாக தங்க வைத்திட ஏதுவாக அருகில் உள்ள பொது கட்டிடங்கள் அல்லது திருமண மண்டபங்களினை தேர்ந்தெடுத்திட வேண்டும். தங்களது மண்டலங்களில் உள்ள நிவாரண முகாம்கள், மருத்துவமனைகள் மற்றும்

பல்நோக்கு பேரிடர் மேலாண்மை கட்டிடங்கள் மற்றும் அந்தந்த வட்ட / வட்டாரத்தில் உள்ள அனைத்து நிவாரண முகாம்களின் கட்டிட உறுதித்தன்மை, தண்ணீர் வசதி, போதுமான இடவசதி, ஜெனரேட்டர், உணவு தயார் செய்யபடக்கூடிய இடங்கள் போதுமானதாக உள்ளனவா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அவ்வாறு கட்டிடம் உறுதித்தன்மை மற்றும் இடவசதி இல்லாத இடங்களில் புதியதாக நிவாரண முகாம்கள் கண்டறியப்பட வேண்டும்.

பாதிப்படையக்கூடிய பகுதிகளில் உள்ள பள்ளி / கல்லுரிகளில் பேரிடர் மேலாண்மை தொடர்பான விழிப்புணர்வுக்கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். மிகவும் தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி இருப்பின் அதனை உடனடியாக வடியச்செய்திடத் தேவையான கனரக மோட்டார் பம்பு உள்ள இடங்களை தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். தேர்வு செய்யப்பட்ட நிவாரண முகாம்களுக்குச் செல்ல ஏதுவாக இருவழிப் போக்குவரத்துத் தடங்கள் கண்டறிந்திட வேண்டும்.

பாதிப்படையக் கூடிய பகுதியில் முன்னுரிமை அடிப்படையில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை அலுவலர்களைக் கொண்டு மாதிரிப் பயிற்சியினை அவ்வப்போது நடத்திட வேண்டும். தொடர்புடைய குழு அலுவலர்கள் துணை ஆட்சியர் நிலையிலான மண்டல அலுவலருடன் இணைந்து நடத்திட வேண்டும். அந்தந்த பகுதிகளில் வெள்ள காலங்களில் தண்ணீர் போக இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை உடன் அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், குழு உறுப்பினர்கள் அனைவரும் வடகிழக்குப் பருவமழை காலத்தில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆனந்த்.,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட நேர்முக உதவியாளர் (பொது)(பொருப்பு) திரு.இராமசந்திரன், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.பாலசந்திரன், திரு.புண்ணியக்கோட்டி, மற்றும் அனைத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவாரூர் மாவட்டம்.**